UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension

October/November 2004

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen on both sides of the paper.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.
At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

This document consists of **3** printed pages and **1** blank page.

SP (SC/SLM) S57366/2
© UCLES 2004
UNIVERSITY *of* CAMBRIDGE International Examinations

**[Turn over**

www.theallpapers.com

## Section A – Translation

**1** Translate into **English.**

என் குற்றங்களை ஏற்றுக்கொண்டேன். அதற்கான தண்டனையை வழங்க வேண்டும் என்று என் தந்தையாரிடம் கேட்டுக்கொண்டேன். எனினும், பயத்தால் என் உடலெல்லாம் நடுங்கியது. அந்த நேரத்தில் என் தந்தையார் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையில் இருந்தார். அவர் கண்ணை மூடிக் கொண்டு சிறிது நேரம் சிந்தித்தார். ஏதோ சொல்வதற்கு எழுந்து உட்கார முயற்சி செய்தார். ஆனால் அவரால் முடியவில்லை. அவர் திரும்பவும் படுத்துக் கொண்டார். என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

[10]

**2** Translate into **Tamil.**

Suresh and his friends were sitting in the shade of a banyan tree. They saw a man entering a hut. He was wearing a uniform. After a few seconds he came out quickly and rode off on his bicycle. Just then, Rita came out and shouted, 'Thief! Thief!' The boys chased the thief. It was bad luck for the thief. His cycle hit a big stone and he was thrown on the ground. The boys grabbed him and took him to the police station. As soon as he saw the policemen he revealed the truth and handed over a golden chain.

[20]

© UCLES 2004



www.theallpapers.com

## Section B – Comprehension

Do not translate the passage below. Read it carefully and then answer in **Tamil** the questions that follow.

வலாரி என்னும் ஊரில் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் வீட்டுக்கு வருவோர்க்கெல்லாம் பொருள்களை வாரி வாரி வழங்குவான். இது வெள்ளிக் கிழமைதோறும் நடைபெறும் நிகழ்ச்சி. கிழவர் ஒருவர் அவ்வள்ளலின் கொடைத் திறத்தைக் கேள்விப் பட்டார். அவர் மிகவும் ஏழை ; வறுமையில் வாடினார். அதனால் அந்த வள்ளலைச் சந்தித்துப் பொருள் பெற்றுச் செல்ல எண்ணினார். கையில் ஒரு கோல் ஊன்றித் தெருவழியே மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் மதம்கொண்ட யானை ஒன்று வேகமாக வந்துகொண்டிருந்தது. அந்த யானை தன் முன்னால் இருப்பதையெல்லாம் அழித்துச் சென்றது. இதைக் கண்ட மக்கள் எல்லாரும் பயந்து ஓடி மறைந்தனர். ஆனால் கிழவரால் ஓட முடிய வில்லை. யானை அக்கிழவரை நோக்கி வந்தது. "என்னைக் காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்! " என்று கிழவர் உரக்கக் கத்தினார்.

அந்தக் காட்சியை அத்தெருவில் இருந்த மக்கள் கண்டனர். கிழவர் நிலைமையை எண்ணி வருந்தினரே ஒழிய யாரும் அவரைக் காப்பாற்ற முன்வரவில்லை. ஆனால் கூப்பிடும் குரலைக் கேட்ட வலாரி வள்ளல் விரைந்து வந்தான். யானையை அடக்கிக் கிழவரைக் காப்பாற்றினான். இந்தச் செய்தியைக் கேட்ட வலாரி மக்கள் வள்ளலுடைய வீரச்செயலையும் கொடைத் தன்மையையும் மிகவும் பாராட்டி மகிழ்ந்தனர். வள்ளல் கிழவருக்குப் பொருளைக் கொடுத்து அனுப்பி வைத்தான். தன் கடமையைச் செய்த ஒரு மனதிருப்தி அவனுக்கு ஏற்பட்டது.

Now answer the following questions in **Tamil**, using your own words as far as possible.

1 வள்ளல் என்றைக்குப் பொருளை வழங்குவான்? [3]

2 கிழவர் ஏன் வள்ளலைப் பார்க்கச் சென்றார்? [3]

3 மதம் பிடித்த யானையைக் கண்ட கிழவர் என்ன செய்தார்? [3]

4 வள்ளலிடம் காணும் இரண்டு உயர்ந்த பண்புகளைக் குறிப்பிடுக. [4]

5 வள்ளலின் வீரச்செயலைப் பகுதியில் உள்ள எந்த வாக்கியம் காட்டுகிறது? [4]

6 கிழவரைக் காப்பாற்ற முன்வராத மக்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? [4]

7 கீழ்வரும் சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக:

அ) வறுமை ஆ) கிழவர் இ) சமயத்தில் ஈ) பாராட்டினர் [4]

[Total : 25]



www.theallpapers.com

**BLANK PAGE**

University of Cambridge International Examinations is part of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.



www.theallpapers.com